"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." சங்கீதம் 16:11.

# வேதமாணவர்களின்

# 34வது ஆவிக்குரிய மாநாடு

## நாள்: 28 & 29.12.2024

சனி & ஞாயிறு

# குழு கலந்தாய்வு

## கிறிஸ்தவ சுயாதீனம்

சகோ.முத்துக்குமார், (விழுப்புரம்)

சகோ.இம்மானுயேல் ஜேக்கப் (தாம்பரம்)

சகோ.ஸ்டீபன் (மேட்டுப்பாளையம்)

சகோ. ரகுநாதன் சென்னை

# குழு கலந்தாய்வு

# Panel Discussion

# தலைப்பு

# கிறிஸ்தவ சுயாதீனம்

# Christian Liberty

## ஆதார வசனம் - கலாத்தியர் 5:1 (Gal 5:1)

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்.

Stand fast therefore in the liberty wherewith Christ hath made us free, and be not entangled again with the yoke of bondage.

# கேள்விகள்

1. சுயாதீனம் என்றால் என்ன? அது நமக்கு எப்படி கிடைத்தது? மற்றும் சுயாதீனம் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன?

2. 1 பேதுரு 2:16–ன் படி "சுயாதீனத்தை துர்குணத்திற்கு மூடலாக பயன்படுத்துவது" என்பதனை விளக்கவும்?

3. நமக்கான சுயாதீனத்தை சரியாகவோ அல்லது தவறாகவோ நாம் பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ள காரியங்களை கீழ் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறை வாழ்க்கையின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு விளக்கவும்.

   ☞ தனி மனித வாழ்க்கை
   ☞ குடும்ப வாழ்க்கை
   ☞ சபை மற்றும் ஊழியங்கள்

# கேள்விகள்

4. சுயாதீனத்தை நாம் தவறாக பயன்படுத்தினால் நமக்கு வரும் நஷ்டங்கள் என்ன?

5. கிறிஸ்து மூலம் நமக்கு கிடைக்கப் பெற்ற சுயாதீனத்தை சரியான வகையில் பயன்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? மற்றும் அவ்வாறு சரியாக பயன்படுத்தினால் கிடைக்கப்பெறும் ஆசிர்வாதங்கள் என்ன?

16 நீங்கள் விடுதலை பெற்றுள்ளீர்கள்; விடுதலை என்னும் போர்வையில் தீமை செய்யாதீர்கள்; கடவுளுக்கே அடிமைகளாய் இருங்கள்.

# முதல் கேள்வி (First Question)

I. ( i ) சுயாதீனம் என்றால் என்ன?

( ii ) அது நமக்கு எப்படி கிடைத்தது?

( iii ) மற்றும் சுயாதீனம் நமக்கு கொடுக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன?

1. ( i ) What is Liberty?

( ii ) How did we get that?

( iii ) And what is the purpose of the Liberty being given for us?

# இரண்டாம் கேள்வி (Second Question)

2. 1 பேதுரு 2:16–ன் படி "சுயாதீனத்தை துர்குணத்திற்கு மூடலாக பயன்படுத்துவது" என்பதனை விளக்கவும்?

2. According to 1 Peter 2:16, explain the "using your liberty for a cloke of maliciousness"

# மூன்றாம் கேள்வி (Third Question)

3. நமக்கான சுயாதீனத்தை சரியாகவோ அல்லது தவறாகவோ நாம் பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ள காரியங்களை கீழ் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறை வாழ்க்கையின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டு விளக்கவும்.

☞தனி மனித வாழ்க்கை

☞குடும்ப வாழ்க்கை

☞சபை மற்றும் ஊழியங்கள்

3. Compare and explain the things that are possible for us to use our Liberty, rightly or wrongly, with the events of practical life given below.

☞Individual life

☞Family life

☞Ecclesia and Ministries

# நான்காம் கேள்வி (Fourth Question)

4. சுயாதீனத்தை நாம் தவறாக பயன்படுத்தினால் நமக்கு வரும் நஷ்டங்கள் என்ன?

4. What are the losses we incur if we misuse our Liberty?

# ஐந்தாம் கேள்வி (Fifth Question)

5. கிறிஸ்து மூலம் நமக்கு கிடைக்கப் பெற்ற சுயாதீனத்தை சரியான வகையில் பயன்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

மற்றும் அவ்வாறு சரியாக பயன்படுத்தினால் கிடைக்கப்பெறும் ஆசிர்வாதங்கள் என்ன?

5. What must we do to make the right use of the Liberty which we have through Christ?

And what are the blessings if we used it rightly?

# Amen

# லேவியர் 19:28 திருவிவிலியம்

செத்தவனுக்காக உடலைக் கீறிக்கொள்ள வேண்டாம்; பச்சை குத்திக்கொள்ளவும் வேண்டாம்; நானே ஆண்டவர்!

# மூல பாஷை வார்த்தை

## G1657 – Eleutheria (el-yoo-ther-ee'-ah)

Freedom (legitimate or licentious, chiefly moral or ceremonial): - liberty.

சுதந்திரம் (முறையான சுதந்திரம் அல்லது உரிமையுடன் கூடிய சுதந்திரம், முக்கியமாய் ஒழுக்கமான சுதந்திரம் அல்லது சடங்குகளுக்கு உட்பட்ட சுதந்திரம்): - சுயாதீனம்.

# 1 கொரி 10:31

**ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.**

**கர்த்தர் தம்முடைய வார்த்தையில் களியாட்டம் மற்றும் மதுபானத்தைப் பயன்படுத்துவதில் மட்டுமல்லாமல், எல்லா வகையான நடத்தைகளிலும் ஆரோக்கியமான மனதின் தரத்தை அமைக்கிறார். அவரை நேசிப்பவர்கள் அந்தத் தரத்தை அடைய முயற்சி செய்வார்கள். R5099:3**

# R3665: 6

**இது புசித்தல் குடித்தல் மற்றும் உடைக்கு மட்டுமல்ல வாழ்க்கையின் ஒவ்வொரு விருப்பங்களுக்கும் மற்ற அனைத்து காரியங்களுக்கும் பொருந்தும். R3665: 6**

# R5409 - தனிப்பட்ட மற்றும் சபையாரின் உரிமைகள்

- யாருமே தனது சகோதரனை தடைபண்ணவோ அல்லது கட்டுப்பாடு பண்ணவோ முடியாது என்றாலும், நாம் நம்முடைய சுயாதீனங்கள் சிலவற்றை விட்டுக்கொடுத்திடலாம்.

- ஆகையால் வேதத்தின் மாணவர்கள் காணப்படும் சபைகளில் அங்கத்தினர்களாகியுள்ள அனைவரும் தனிப்பட்ட உரிமைகளை ஒப்புக்கொடுத்துவிடுகின்றனர்.

- தனது சொந்த தனிப்பட்ட சுயாதீனத்தை மீண்டுமாகக் கையில் எடுத்துக்கொள்ளும்போது, அவன் சபையாரின் ஓர் அங்கத்தினன் என்றுள்ள தனது சிலாக்கியங்களைக் கையளித்துவிடுபவனாக இருப்பான்.

# Amen…

# கிறிஸ்தவ சுயாதீனம்

ஆதார வசனம் - கலாத்தியர் 5:1

இது தேவனிடத்தில் இருந்த குணலட்சனம், அவர் தம் குணலட்சணத்திற்கொத்த நிலையையும், கூடவே சுயாதீனத்தையும். கொடுப்பதற்கு முடிவெடுத்தார். ஆகையால் தேவன் மனுஷனை தம்முடைய சாயலில் படைத்தார், ஆனால் அதை இழந்து விட்டோம். மறுபடியும் சுயாதினத்தை கர்த்தர் இயேசுவின் (இரத்தம்) ஈடுபலி புண்ணியத்தினாலே நமக்கு கிடைத்திருக்கிறது.

*(புதுச் சிருஷ்டியின் இலக்கு Pg.24)*

சபைக்கு கொடுக்கப்பட்ட சுயாதீனம் என்பது, பூமிக்குரிய தற்கால ஆசீர்வாதம் என நாம் நினைக்கக் கூடாது. *(LOC 358)*

அனைத்தையும் தேவன் தன் சித்தத்தின் அடிப்படையில் கையாளுகிற காரியம், மனிதனுடைய சுயாதீனத்திற்கு உட்பட்டு தேவன் காரியங்களை கையாளுவார்.

*(யோசேப்பு நம் முன்மாதிரி என்கிற புத்தகம் Pg.28)*

# மல்கியா 2:7

ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக்
காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே
தேடுவார்களே; அவன் சேனைகளுடைய
கர்த்தரின் தூதன்.

பிள்ளையைக் கண்காணிக்கும் தன் பொறுப்பினை அடையாளம் கண்டுகொள்ளும் ஒவ்வொரு பெற்றோரும், பிள்ளையை அவனுடைய சுயாதீனத்தின் கண்ணோட்டத்தின்படியே கையாண்டிட நடத்த வேண்டும்; மேலும் காரியங்கள் ஏன் இன்னின்னபடியாகச் செய்யப்படுகின்றது என்பதற்கான காரணத்தைப் பிள்ளைக்குக் காண்பிக்க நாடி, கூடுமானமட்டும் பிள்ளையினுடைய சொந்தச் சித்தத்தை அறிவுள்ள விதத்தில் பிள்ளையைக்கொண்டு செயல்படவைத்தே, பிள்ளையைக் கட்டுப்படுத்திட நாடிட வேண்டும்.

**கர்த்தர் ஒவ்வொருவருக்கும் அருளியுள்ளதான மனசாட்சி மற்றும் நடத்தைக்கடுத்த சரியான சுயாதீனத்தின் விஷயத்தில் தலையிடுவதற்கு யாரும் பிரயாசம் எடுத்து விடக்கூடாது.**

*(புது சிருஷ்டியின் ஒழுங்குமுறை Pg.194 )*

நம்முடைய சுயாதீனங்களுக்காக நாம் மிகவும் போராடுகிறவர்களாய் இருந்து இதனால் கிறிஸ்து மரித்துள்ளதான ஏதோ ஒரு சகோதரனை நாம் பட்சித்துப்போடுவோமானால் என்னவாகும்!

ஒருவரைக் காயப்படுத்துவதினால். நம்முடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியங்களை விஷமாக்கிப்போட்டு, நாமும் பரீட்சிக்கப்பட்டுப் போகும்மளவுக்கு கர்த்தர் நம்மை அழைத்துள்ளதும் ஓட்டத்தினை நாம் ஓடுவதற்குமான கிருபையான காரியங்கள் தொடர்புடைய விஷயங்களில் இழப்பிற்குள்ளாகுமளவுக்கு, சண்டையின் ஆவி நம்மிடத்தில் கிரியைப் பண்ணுமானால் என்னவாகும்!

சகோதர சகோதரிகள் சபையாராகக் கூடுகையில், தங்களுடைய தனிப்பட்ட சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்களில் சிலவற்றை விட்டுக்கொடுக்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தனிப்பட்ட விருப்பங்கள் என்பது சபையாரின் விருப்பத்திற்கென ஒபபுக்ககொடுக்கப்பட வேண்டும்.

*(புது சிருஷ்டியின் ஒழுங்குமுறை Pg.305)*

சுயாதீனத்தை மீண்டுமாகக் கையில் எடுத்துக்கொள்ளும்போது, அவன் சபையாரின் ஓர் அங்கத்தினன் என்றுள்ள தனது சிலாக்கியங்களைக் கையளித்துவிடுபவனாக இருப்பான்.

ஒருவேளை கர்த்தருக்கான நமது அர்ப்பணிப்பானது முழுமையாகக் காணப்படுமானால், நம்முடைய எண்ணங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் முழுக்கக் கட்டுப்பாட்டில் கொண்டிருப்போமானால், நம்முடைய சுயாதீனமும், பெரிதான குறிக்கோளும் சரியாய்ச் செயல்படுகிறதாயும், நமக்கும், மற்றவர்களுக்கும் இறுதியில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறதாயும் இருக்கும். ஆனால் ஒருவேளை திவ்விய சித்தமானது முதலாவதாகக் காணப்படாமலும், நம்முடைய சித்தங்களை முழுமையாய்க் கட்டுப்படுத்துகிறதும் இல்லையெனில், நாம் அதிகம் குறிக்கோளும், அதிகம் சுயாதீனமும் கொண்டிருப்பதற்கேற்ப, நமக்கான அபாயமும் அதிகமாய் இருக்கும். *(R4709)*

# கிறிஸ்தவ சுயாதீனம்

ஆதார வசனம் - கலாத்தியர் 5:1

# *AMEN*








It is applicable not only to food and drink and clothing, but to every interest and affair of life. R3665

இது உணவு, பானஙங்கள் மற்றும் உடைகளுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையின் ஒவ்வொரு ஆர்வத்திற்கும் விவகாரங்களுக்கும் பொருந்தும். R3665

# 1 கொரிந்தியர் 10:31 (1 Corinthians)

**ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.**

**Whether therefore ye eat, or drink, or whatsoever ye do, do all to the glory of God.**